**சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.113/2024

நாள்:26.08.2025.

வா.சா.1 – சுசிலா

**1 முதல் 6 மற்றும் 9 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு போட்டதற்கான விவரங்கள் மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது, எனக்கு வயதாகி விட்டது. வழக்கு சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் வடக்கில் தங்கையன் மற்றும் செல்லம்மாள். தாவா சொத்து விவரத்தில் நான்கெல்லை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வீடு இல்லை. சொத்து எனக்கு சொந்தம் என்று பரிகாரம் கேட்டுள்ளேன் மற்ற பரிகாரங்கள் என்ன என்றால் தெரியவில்லை. நான் இந்த வழக்கில் எத்தனை ஆதரவு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆதரவுகளில் தாவா சொத்து எனக்கு தான் சொந்தம் என்று சொல்வதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த கிராமத்தை விட்டு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே சென்றுவிட்டேன். என்றால் சரிதான். அதன் பிறகு இந்த வழக்கு போட்ட பின்பு தான் வந்து போகிறேன் என்றால் சரியல்ல. அவ்வப்பபோது வந்து பார்த்து போகிறேன். என் கணவர் பெயர் கோவிந்தசாமி. என் கணவர் இறந்து சுமார் 12 வருடங்கள் ஆகும். என் பிராதில் சொல்லியுள்ள ஆறுமுகம் யார் என்றால் என் மாமனாருடைய அப்பா. மேற்படி ஆறுமுகம் 100 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு எத்தனை வாரிசுகள்

என்றால் 2 பேர். வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை. ஆறுமுகத்திற்கு பெண் வாரிசு இருக்கிறார்களா என்றால் தெரியாது. ஆறுமுகத்திற்கு மொத்தம் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பழனிச்சாமி என்பவர் என் மாமனார். தாவா சொத்திற்கு பழனிச்சாமி பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். பழனிச்சாமி இறந்து சுமார் 30 அல்லது 40 வருடம் இருக்குமா என்றால் இருக்கும். பழனிச்சாமியும் தங்கராசுவும் பாகம் பிரித்துக் கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் ஒரே சொத்து தான். பாக அட்டவணை எழுதவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எனக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு என் கணவருக்கு பாகமாக வந்தது. என் கணவருக்கு தாவா சொத்து சொந்தம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு இரண்டு வருடத்திற்கு முன்பு வில்லங்கம் எடுத்து பார்த்தேன். அந்த வில்லங்கத்தில் யார் யார் பெயர் வருகிறது என்றால் என் மாமனார், என் கணவர் பெயர் வருகிறது. அந்த வில்லங்கத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். செகதாம்பாள் என்பவருக்கு எதிராக என்ன பரிகாரம் கோட்டுள்ளேன் என்றால் எனக்கு விவிரம் தெரியவில்லை. 21.07.1997 தேதியிட்ட 2 கிரைய பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேன். செகதாம்பாள், செல்லம்பாள் ஆகியோர் கிருஷ்ணமூர்த்தியிடம் கிரையம் வாங்கியுள்ளாதால் சேர்த்துள்ளேன். கிருஷ்ணமூர்த்தியும் ராமமூர்த்தியும் கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். 21.07.1997 தேதியிட்ட 2 கிரைய பத்திரங்களை எப்போது நகல் எடுத்துபோட்டேன் என்று தெரியாது. தற்போது இந்த சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் கிருஷ்ணமூர்த்தியும் ராமமூர்த்தியும் அவர்களுடைய பேரன் பெயரில் எழுதி வைத்துள்ளார்கள். எனக்கும் என் கணவருக்கும் தாவா

சொத்தில் எந்தவித பாக உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை கடந்த 60 வருடங்களாக கிருஷ்ணமூர்த்தியும் ராமமூர்த்தியும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கிருஷ்ணமூர்த்தியும் ராமமூர்த்தியும் 30 வருடங்களாக ஊரில் இல்லை. 50 வருடங்களுக்கு முன்பே நானும் ஊரைவிட்டு சென்றுவிட்டதால் தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த சொத்து 9ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்பதால் 9ம் பிரதிவாதிக்கு எதிராக நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இப்போது கூரை வீடு உள்ளது என்றாலும் தாவா சொத்து காலிமனை என்று நான் சொல்லியுள்ள தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு நான்கெல்லை போடாமல் தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு உரிய அனைத்து வருவாய் ஆவணங்களும் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக கிருஷ்ணமூர்த்தி, ராமமூர்த்தி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தியும் ராமமூர்த்தியும் தாவா சொத்தை 9ம் பிரதிவாதியின் கணவரிடம் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றாலும் தற்போது அவருடைய அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.